# தமிழ் நிலம்

உலகத் தமிழினமுன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனர்

தி. பி. 2021 விடை (15/31-5-90) ஓர் உருபா (இதழ் எண்: 138)


## தஞ்சை, தமிழ்த் தேசியத் தன்னுரிமை

# மாநாட்டுக்குத் தடை!

கழக முதல்வர் - பாவலரேறு

## பெருஞ்சித்திரனர்

## நெடுமாறன், சாலையார், சாலினியார்

### சுப. வீரபாண்டியன், பொழிலன், சுகுமாரன்,

துரை தென்னவன், கி. வேங்கடராமன், வியனரசு, எம். கே. டி.,

சியாவுதீன், மித்ரா, சீனிவாச (ராவ்) மற்றும்

## 200 பேர் சிறைப்படுத்தம்!

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

## செய்திகள், கருத்துகள், செயற்பாடுகள்.

(துணைப் பொதுச்செயலர் பறம்பை அறிவன் அவர்களின் கருத்துகள், மடல்கள், அறிக்கைகள் முதலியன இப் பகுதியில் தொடர்ந்து வெளிவரும். தேவையான. விடத்து முதல்வர் அறிக்கைகளும், மடல்களும் அவ்வப்பொழுது இடம் பெறலாம்.)

**1, அமர்த்தங்கள் / 1-5-90**

(1) துணைப் பொதுச்செயலாளர் பறம்பை அறிவன் முதுகுளத்தூர் கிளைக்கு,

(1) **அ. இளம்பிறை,** 20, திடல் தெரு' முதுகுளத்தூர் 623 704.

(2) **க. செல்லத்துரை** (க. இ) செல்லியம்மன் கோயில் தெரு, முதுகுளத்-தூர் 623 707.

இருவரையும் பொறுப்பாளராக அமர்த்தம் செய்-கிறார்.

(2) இராமநாதபுரம் கிளையைப் புதுப்பிக்கவும்—சீர் பெறவும் தக்க அறிவுரைகளை வழங்கிச் செயல் படத் தமிழ் ஆர்வலர் பெரியவர்,

திரு. **வா. மெ. இரெத்தினம்** அவர்கள்'

மறவர் தெரு, இராமநாதபுரம்.

அவர்களை அமைப்பாளராக அமர்த்தம் செய்து அறிவிக்கிறார் து.பொ. செயலர் பறம்பை அறிவன்.

இவர்க்குத் தமிழ் ஆர்வலர்கள் இ. அருள். நேயன், பாபு, பழ. மகிழ்நன், மறைமணாளன் உதவியாக இருப்பர்.

மேற்கண்ட கிளைப் பொறுப்பாளர்கள் முகவரி-யோடு தொடர்பு கொண்டு தமிழன்பர்களும் ஆர்வலர்களும் உ. த. மு. க. வளர்ச்சிக்கு உறு துணையாக நிற்கும்படி வேண்டுகிறேன்.

பறம்புக்குடி பறம்பை அறிவன்
2-5-90 துணைப் பொதுச்செயலர்.

**2. தோழமை இயக்கங்கள், தலைவர்கள் பெருமகர்கள் ஆகியோர்க்கு வேண்டுகை மடல்கள்!**

**அ. பெ. மணியரசன்—'கண்ணோட்டம்'**

பெறல்:

தோழர். **பெ. மணியரசன்,**
**'கண்ணோட்டம்'**—ஆசிரியர்,
25/5. இலால்கான் தெரு, சிதம்பரம்—608 001.

**தோழமை சான்றீர்,**

**வணக்கம்.** 25-2-90-இல் சென்னை—பெரியார் திடலில் 'தமிழ்த் தேசியத் தன்னுறுதி' மாநாட்டை நடத்தி வெற்றி கண்ட வேளை ஏப்ரல் 90, கண்ணோட்டம்,

'மக்கள் மீது சுமை ஏற்றம்'—'தமிழகம் புறக் கணிப்பு' தேசிய முன்னணியின் வரவு—செலவுத் திட்டம்' ஒரு பார்வையை வெளியிட்டுள்ளது.

சிறிய மாநிலம் கேரளத்திலும் பார்க்கத் தமிழகம் புறக்கணிக்கப்பட்ட உண்மை அறிந்து, தமிழக மக்களும், அரசும் தங்கள் எதிர்ப்பைக் காட்டுவர் என நம்புகிறேன்.

'உலகத் தமிழின முன்னேற்றக் கழக'த்தின் வேலையை—நிலையைச் சரியாக மதிப்பிட்டுப் பண்பாட்டுத் தளத்தில் தமிழ்க் கலை இலக்கியப் பேரவையுடன் உறவும் தோழமையும் கொண்டியங்க உதவுவீர்கள் என நம்புகிறேன். நன்றி.

தங்கள்,
பறம்புக்குடி, பறம்பை அறிவன்.
17-4-1990.

**ஆ: தமிழக வரவு செலவுத் திட்டமும் தனியார் பள்ளி ஆசிரியர்களும்!**

பெறல்:

தோழர். **உதயை. மு. வீரையன்,**
ஆசிரியர்,
கல்வி மறுபக்கம் கண்ணோட்டம்,
4, சிங்கப் பெருமாள் கோவில் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

தோழர்க்கு,

வணக்கம். 'மக்கள் கல்வி இயக்கம்' சுட்டிக் காட்டியபடி தங்களின் ''தமிழக அரசின் வரவு-செலவுத் திட்டமும் தனியார் பள்ளி ஆசிரியர்களும்'' கட்டுரை, எழுத்தறிவின்மை, கல்வி வணிகச் சரக்-கான இழிநிலை, தனியார் பள்ளி ஆசிரியர் அலுவலர் அடிமை நிலை பற்றிப் பேசுகிறது. பாராட்டுகள்!

இதழில் ''**அராபிய எண்கள் தமிழ் எண்களே**'' என்ற புரட்சிப் பாவலர் கனக சுப்பு-ரத்தினம் கட்டுரையின் வெளியிட்ட தங்களின் 'தமிழின உணர்வை' வரவேற்கிறேன். வாழ்த்து-கிறேன்.

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

**தமிழர் தேசிய இயக்கம்** சூன் 9, 10 நாள்களில் தஞ்சையில் **தமிழர் தன்னுரிமை அறிவிப்பு மாநாடு** நடத்த திட்டமிட்டிருந்தது. அவ்வியக்கம் அதற்காக பெருமளவில் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தது.

இம்மாநாட்டில் நம் **பாவலரேறு** ஐயா அவர்களும் மற்றும் பல தலைவர்களும் அசாம், கருநாடகா, பஞ்சாப் (மான்—அகாலிதளம்) தெலுங்கு தேசங்களின் விடுதலை இயக்கத் தலைவர்களும் கலந்து கொள்ளவிருந்தனர்.

மாநாட்டிற்கு அரசு முதலில் இசைவு வழங்கியிருந்தது. ஆனால், 'மாநாட்டை நடத்தவிடக்கூடாது' என்று பார்ப்பனத் தலைமைகளும், **பாரதிய சனதாக் கட்சியும்** இந்தியக் குடியரசுத் தலைவருக்கும் தலைமை அமைச்சருக்கும் தொலைவரிகள் கொடுத்திருந்தன.

மாநாட்டின் ஒரு பிரிவாக, இந்தியப்படை தமிழீழத்தில் நடத்திய கொடுமைகளும் படுகொலைகளும் பற்றிய ஒளிப்படக் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. இப்படங்கள் ஏற்கனவே, தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்த பொழுது முரசொலி இதழில் வெளியிடப்பட்டவை ஆகும்.

''என் தமிழினத்தைச் சேர்ந்த 5000 பேரைக் கொன்றுவிட்டுத் திரும்பும் இந்தியப் படையை நான் வரவேற்கச் செல்லமாட்டேன்'' என்று கூறிய முதலமைச்சர் கலைஞரின் கூற்றுக்குப் படங்கள் மூலம் விளக்கம் தருவதாக இந்தக் கண்காட்சி இருந்தது.

மேலும் இந்த ஒளிப்படங்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவுப் பொத்தகம் ஒன்றில் வந்திருந்தவை. அப் பொத்தகத்திற்கு இன்றைய இந்திய நடுவணரசு அமைச்சர் ஃபெர்ணாண்டசு முன்னுரையும் எழுதியிருக்கிறார்.

ஆனாலும் **'இந்தக் கண்காட்சிப் படங்கள் இந்தியப் படையை இழிவுபடுத்துகின்றன'** என்றும் **'இந்தியா-இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே உள்ள நல்லுறவைக் கெடுக்கும்'** என்றும் தமிழக (!) அரசு கூறி இந்த ஒளிப்படங்களைக் கைப்பற்றி இக்கண்காட்சியை ஏற்பாடு செய்த திரு. வியனரசு உட்பட மூன்று பெயர்களைத் தளைப்படுத்தியது.

அதோடு நில்லாமல், பாரதிய சனதாக் கட்சி வேண்டுகோள் விடுத்திருந்ததன்பேரில் மாநாடு நடத்த ஏற்கனவே வழங்கியிருந்த இசைவினைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மாநாடு நடத்தத் தடைபோட்டது.

அரசின் தடையை மீறி மாநாடு நடக்கும் என்றறிவித்தார் இம்மாநாட்டின் அமைப்பாளர் திரு. நெடுமாறன் அவர்கள்.

நேரடி நடவடிக்கையாக மாநாட்டுக்குத் தடை விதித்த தி.மு.க. அரசு மறைமுக வன்நடவடிக்கையாக மாநாட்டுப் பந்தலைப் பிரிக்கச் சொல்லி, பந்தல் ஒப்பந்தக்காரரை மிரட்டியது.

முன் எச்சரிக்கை நடவடிக்கை என்று தமிழகம் முழுவதும் தமிழர் இயக்கங்களைச் சேர்ந்த பலர் சிறை வைக்கப்பட்டதாகத் தெரிகிறது. செய்தித் தொடர்பு கருவிகள் வழி மாநாடு தடை செய்யப்பட்டுள்ளது என்றறிவித்து பெருமளவில் மக்கள் கூடிவிடாமல் பார்த்துக் கொண்டது அரசு.

மேலும் தஞ்சை நகரெங்கும் காவல் துறையினரைக் குவித்து வைத்து மக்கள் நடமாட்டத்தையே தடுத்துக் கொண்டிருந்தது. மாநாடு நடக்கவிருந்த திடலின் வாயில்கள் மூடப்பட்டு துமுக்கி ஏந்திய காவலர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர்.

மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருந்த தலைவர்கள் தங்கியிருந்த விடுதிக்கு காவல் துறை படையெடுத்தது. அங்கு அவர்களைத் தளைப்படுத்த அணியமானது.

மாநாட்டின் ஒரு பகுதியான பாவேந்தர் விழாவை முதன்மைப்படுத்தி பாவேந்தரின் தமிழக விடுதலைக் கருத்துப் பாடல்களை நடுவமாகக் கொண்டு மாநாட்டினை எவ்வாறேனும் நடத்திவிடலாம் என்று தலைவர்கள் எண்ணியிருந்தார்கள்.

ஆகவே காவல்துறையினர் தளைப்படுத்த முயன்றபோது, ''மாநாடு இரண்டு மூன்று பிரிவுகளாக நடக்கிறது; ஒரு பிரிவு கண்காட்சி; இன்னொரு பகுதி பாவேந்தர் விழா...என்று பல பிரிவுகளில் தன்னுரிமை அறிவிப்பு மாநாட்டிற்குத் தானே அரசு தடை; அரசே கொண்டாடும் பாவேந்தர் விழாவை ஏன் தடுக்க வேண்டும்; எங்களை ஏன் தளைப்படுத்த வேண்டும்'' என்று நம் பாவலரேறு ஐயா அவர்கள் எதிர்ப்பு தெரிவித்தார். ஆனாலும் அங்கிருந்த தலைவர்களையும் உடனிருந்த தோழர்களையும் தளைப்படுத்தினர் காவல் துறையினர்.

சிறைக்கு அழைத்துச் செல்லும் வழி முழுவதும் ''தலைவர்களை மட்டும் விடுவித்து விடுகிறோம்-சென்றுவிடுங்கள்'' என்று காவல் அதிகாரி கூறிக் கொண்டே வந்தார். ''ஏன் எங்களை மட்டும் விடுகிறீர்கள்?'' என்று வினவியபோது, ''மேலிடத்திலிருந்து வந்த ஆணை'' என்ற விடை கிடைத்தது.

''விடுவித்தால் அனைவரையும் விடுவியுங்கள், இல்லையெனில் எங்களையும் சிறையிலடையுங்கள்'' என்று உணர்வு பொங்கக் கூறினார்கள் தலைவர்கள்.

நெடுமாறன் இருக்கும் இடம் தெரியாமல் காவல்துறையினர் தேடிக் கொண்டிருந்த போது, திரு. நெடுமாறன் அவர்கள் திடுமென பேருந்து நிலையத்தில் தானியில் வந்திறங்கி

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

வெளிநாட்டார் பார்வையில்:

# விடுதலைப் புலிகளின் வெற்றியும், வட இந்தியப் படையின் வெளியேற்றமும்!

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா

(நடவாதென்பதை நடத்தினம் என்றும், இயலாதென்பதை இயற்றினம் என்றும், முடியாதென்பதை முடித்தனம் என்றும், மிக வலிமை வாய்ந்த வடஇந்தியப் படையொடு போரிட்டு, அதனைத் தமிழ் ஈழத்தினின்று வெளியேற்றி வாகை சூடிய தமிழ் ஈழ விடுதலைப் புலிகட்கு இச் செய்தித் திரட்டினை அன்பளிப்பாகப் படைக்கிறேன்.)

1. இந்தியா தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் நடத்திய போரில் தோல்வி கண்டது.

—நியூயார்க் டைம்சு, அமெரிக்கா.

2. இந்தியா தமிழ் ஈழ விடுதலைப் புலிகளைப் போரில் வெல்ல முடியவில்லை. இந்தியப் படை அவமானத்துடன் வெளியேறியது.

—டைம்சு, இங்கிலாந்து.

3. பாடங் கற்பிக்கப்பட்ட இந்தியப் படை யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியது.

—டைம்சு, இங்கிலாந்து.

4. புதுதில்லியின் சிரீலங்கா குறித்த கொள்கை முற்றிலும் தோற்கடிக்கப்பட்டது.

—நியூயார்க் டைம்சு, அமெரிக்கா.

5. விடுதலைப் புலிகளிடம் நிறையப் போர்க்கருவிகள் இருக்கின்றன....சிரீலங்காவின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் ஈழம் என்ற விடுதலை பெற்ற நாடு அமைவது, எப்போதையும் விட இப்போது மிக அண்மையில் இருப்பதாகத் தெரிகிறது.

— டைம்சு, இங்கிலாந்து.

(பின் குறிப்பு: அமெரிக்காவிலிருந்து வெளிவரும் 'நியூயார்க் டைம்சு' (New York Times) என்ற ஆங்கில நாளிதழும், இங்கிலாந்திலிருந்து வெளிவரும் 'டைம்சு' (Times) என்ற ஆங்கில நாளிதழும், அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் மட்டுமல்லாமல், பிற நாடுகளிலும் படிக்கப்படுகின்றன. இவை மிகவும் சாய்காலுள்ள (செல்வாக்குள்ள) தாளிகைகள். அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் பிற நாடுகளின் ஆட்சித் தலைவர்கள் அல்லது அவர்களது கருத்தாளர்கள் (ஆலோசகர்கள்) (advisors) இத் தாளிகைகளைத் தவறாது படித்து உலக நடப்புகளைத் தெரிந்து கொள்கிறார்கள்.)

## அரசு அலுவலகங்களில் முதல்வர் படம் இருக்கக் கூடாது!

ஆந்திர மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும் முதல்வர் படம் இடம் பெற வேண்டும் என்று முந்தைய தெலுங்கு தேச அரசு உத்தரவிட்டிருந்தது. அவ்வாறான படங்கள் எந்த அரசு அலுவலகத்திலும் இடம் பெறக் கூடாது என்று ஆந்திர அரசு கட்டளையிட்டுள்ளது. அதனால், முன்னாள் முதல்வர் என்.டி.இராமாராவின் உருவப்படமிருந்த இடங்கள் இப்போது வெறுமையாகக் காட்சியளிக்கின்றன.

## தொலைக் காட்சி பார்ப்பவர்கள்!

தென் மாநிலங்களில் தொலைக் காட்சி பார்ப்பவர்கள் தமிழ் நாட்டிலேயே அதிகம் பேர் என்று ஓர் ஆய்வு தெரிவிக்கிறது. தமிழ் நாட்டில் மொத்த மக்களில் 44 விழுக்காட்டினரும், கருநாடகத்தில் 43 விழுக்காட்டினரும்,கேரளத்தில் 33 விழுக்காட்டினரும் ஆந்திராவில் 29 விழுக்காட்டினரும் தொலைக்காட்சி பார்ப்பதாக அந்த ஆய்வு கூறுகிறது.

## பல்கலைக் கழக ஆங்கில அறிக்கையில் மிக அதிக அளவில் பிழைகள்!

சூன் 3-ஆம் நாள் திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் ஆட்சியினர் பேரவை நடந்தது. அதில் வெளியிடப் பெற்ற ஆண்டறிக்கை ஆங்கிலத்தில் இருந்தது. அதில் மிக அதிகமான பிழைகள் இருந்ததாக, அவ்வறிக்கையின் மீது பேசிய பல்கலைக் கழகப் பேராசிரியர் கே. பொன்னுசாமி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழகத்தில் உள்ள பல கல்லூரிகளில் பட்டப் படிப்பு மாணவர்கள் 25 விழுக்காட்டினர் கூட தேறவில்லை என்றும் சில கல்லூரிகளில் 3 முதல்-6 விழுக்காட்டு மாணவர்களே தேர்ச்சி பெற்றிருப்பதாகவும் கூறினர்.

## அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக்கேட்டுக் கொள்கிறோம். O

# பறம்பை அறிவன் பக்கம்!

## 1. கல்வி கற்றல்

கல்வி கற்பித்தல் ஓர் அறப்பணியாகக் கருதிய காலம் ஒன்று உண்டு. இன்று கற்றல் வலியுறுத்தப் பெற்றது. இன்று கல்வி கற்பித்தல் ஒரு தொழில். கல்விக் கூடங்கள் வணிக நிலையங்கள் ஆகி வருகின்றன. கற்றலைப் புறக்கணிக்க வேண்டும் என்கிற கருத்துகள் பரவலாகப் பேசப் படுவதைக் காண்கிறோம். சிறுவில் மாழ, இங்கு செயப்பிரகாச நாராயணன் போன்றவர் பள்ளிக் கூடங்களை மூடவும், புறக்கணிக்கவும் கேட்டுக் கொண்டதை நாம் நினைத்துப் பார்க்கிறோம்.

'பள்ளிக்கூடம் இல்லாத ஊருக்குப் பயணம் போக வேண்டும்' 'அங்கே படிக்க வேண்டியவை ஏராளம் உண்டு' என்ற வரிகளையும் தமிழகம் முணுமுணுத்து வருவதை நாம் அறிவோம்.

'படித்துப் பயன் இல்லை' என்று சொல்லும் அளவுக்கு இன்றைய கல்விநிலை—வாழ்நிலை தாழ்வுற்றுக் கிடக்கின்றன.

பொறியியல் கல்லூரியில் சேர, மருத்துவக் கல்லூரியில் படிக்க இலகக்க் கணக்காகச் செலவிட முடிந்தவர்களே அப் படிப்புகளைப் பற்றி நினைக்க முடியும் என்ற அவலநிலை உள்ளது. அதை விட இன்னும் அவலமான நிலை, அவ்வாறு பெருந்தொகை செலவிட்டுப் படித்து முதல் வகுப்பில் தேறினாலும், அரசுப் பணி பெற அதைவிட அதிகமான பொருள் கையூட்டாகக் கொடுக்க வேண்டும் என்னும் நிலை இருப்பதுதான்; தொடக்கம் முதல் பல்கலை வரையுள்ள படிப்பு—பணக்காரர்களுக்கே —கல்வி வாயில்—திறக்கும்! இந்த வறுமைக் கோடுகளை அவை எப்படி வரவேற்கும்?

## 2. இன்றைய சூழல் எப்படி?

அரசியல் தலைவர்கள், பெரிய அதிகாரிகள், பணமுதலைகள், திரைப்பட நடிகர்கள், அறிஞர்கள் 'ஒருநாள் பொழுது' பற்றி எழுதிய கட்டுரை நேர்காணல் எல்லாம் தாளிகைகளில் வெளிவந்து, நூல் வடிவம் பெற்று விடுவதை அறிவோம்!

ஒரு பொழுதை ஓர் ஊழி கழிவதாகக் கருதி வாழும் எளிய மக்கள் ஏராளம். செய்தியேடுகள் நாள் நடப்பை வெளியிட்டு, உலகின் முகம் 'மாறிக் கொண்டிருப்பதை உணர்த்துகின்றன! ஒவ்வொரு பொழுதையும் மாந்தன் துய்த்துத் தன் தாக்கத்தை மண்ணில் பதிவு செய்கிறான். உலக இயக்கத்தை விரைவு செய்யும் செயலூக்கம் உள்ளவனாக வாழ்ந்து பெருமை எய்துதல் வேண்டும்.

'சீனத் தலைமை அமைச்சர் சுடப்பட்டார்?'—செய்தி உலகை 'அதிர' வைக்கிறது. 'போர் வானவூர்தி வானில் வெடித்தது—அதன 'வலவன்' சாகிறான்; சிறுமி சாகிறாள்! அச்சாவுற்ற குடும்பம் 'கலங்கி' அழுகின்றது. திருச்சி அங்காடியில் சூறையாடல், தீவைப்பு அந்நகரையே நடுங்கப் பண்ணுகின்றது—இப்படிப்பட்ட நிகழ்வுகள் உண்டாக்கும் மாற்றங்கள் 'இயங்கியலை' உந்தும். புதிய வாழ்நிலை தளிர்க்கின்றது. புதைந்த விதை, முளைக்கும்-மண் மேல் தலைநீட்டும் வரை 'ஓர் அமைதி'...அமைதியா? இல்லை! வாழ்க்கைப் போராட்டம்...உலக இயக்கம்!

ஊதிய உயர்வு—சம்பளக் கூடுதல்...சிலரைச் சிலிர்க்கப் பண்ணுகிறது; வைப்பகக் கணக்கு வளர்ந்திட உதவுகிறது. கொட்டியழும்...கடன் பெருஞ் செலவு...கைக்கு வந்தும் வாய்க்கு எட்டாத அவலம்! புதிய புதிய ஏந்துகளை வாங்கும் முயற்சி...இப்படிப் பொழுது பலருக்கும் பல மாதிரி போய்க் கொண்டிருக்கின்றது.

ஒரு கொள்கையில் ஊன்றி நிற்பவர் தம்மைச் சுற்றி நிகழ்கின்ற அத்தனை அசைவுகளுக்கும் புயலடிப்புகளுக்கும் சுழற்சிகளுக்கும்கலங்காதிருக்கிறார்...

அப்படி...ஊன்றி நிற்கும் '**தமிழ் நிலம்**' 'தென்மொழி' '**தமிழ்ச்சிட்டு**'!

தமிழ்ப்பணி பெயரில் நிலை தடுமாறி, பதவி போற்றியும், வாய்ப்புக்காக வாய் அங்காந்தும் திரியும் அவலங்கள் நாட்டில் ஏராளம்!

என்கிற போதும், இன்று தமிழினத்திற்காக எதிரியைத் தனிமை செய்யும் ஒவ்வொரு சிறிய எதிர்ப்புகளையும் 'சிந்தாமல் சிதறாமல்' ஒருங்கிணைக்க வேண்டியது நம் கடமையாகும். அதனைச் செய்யும் 'தமிழ்ப்பணியை' வரவேற்போம்! O

---

### இலங்கையில் மாதத்துக்கு 1000 பேர் படுகொலை!

இலங்கையில் 1989 செப்டம்பர் வரை தங்களுக்குக் கிடைத்த புலனங்களின்படி சமச்சரியாகப் பொது மக்களில் மாதத்துக்கு 1000 பேர்கள் கொல்லப் பட்டுள்ளனர் என்று அனைத்துலக மாந்த உரிமை அமைப்பு (Amnesty International) தெரிவிக்கிறது.

---

### கொர்பச்சேவுக்கு நோபல் பரிசு!

1990-ஆம் ஆண்டுக்கான ஒப்புரவு அமைதிக்கான (சாமாதானத்திற்கான) நோபல் பரிசை சோவியத்து அதிபர் மிகை கொர்பச்சேவுக்கு அளிப்பது என்று நார்வே நாடாளுமன்றம் முடிவு செய்திருப்பதாக, ஆசுலோவில் வெளியாகும் ஒரு செய்தியிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

Scanned with CamScanner

# தமிழ் நாட்டில் தமிழ்வழியில் படித்தவர்க்கு மட்டும் வேலை வாய்ப்பு!

உலகில் எந்த நாட்டிலும், எந்த இன மக்களுமே அவரவர் தாய்மொழியில்தான் படிக்கின்றனர்.

அனைத்து நடவடிக்கைகளும் அவரவர் தாய்மொழியில்தான் நடக்கின்றன.

ஆங்கிலேயன் — ஆங்கிலத்தில்தான் படிக்கின்றான்.
— உருதில் படிப்பதில்லை.

சீனன் — சீனமொழியில்தான்
— படிக்கின்றான்.
— இந்தியில் படிப்பதில்லை.

சப்பானியன் — சப்பான் மொழியில்தான் படிக்கின்றான்.
— சமற்கிருதத்தில் படிப்பதில்லை.

உருசியன் — உருசியமொழியில்தான் படிக்கின்றான்.
— வங்காள மொழியில் படிப்பதில்லை.

ஏன்...? இந்தியத் துணைக்கண்டத்தில்கூட,

வங்காளி — வங்காள மொழி மூலம்தான் அனைத்தையும் படிக்கின்றான்.

இந்தியன் — இந்தி மொழிமூலம்தான் அனைத்தையும் படிக்கின்றான்.

ஆனால் தமிழன் மட்டும் இளித்தவாயன்.

— குழந்தையிலிருந்தே ஆங்கில மொழியும், இந்தி மொழியும் என நஞ்சு ஊட்டப்பட்டு வளர்க்கப் படுகிறான்.

தமிழ்வழியே படிப்பதே — இழிவு எனக் கருதுகின்றோம் நாம். ஏன்...?

தமிழ்வழி படித்தவர்க்கு வேலை வாய்ப்பு இல்லாததினால்தான்.

தமிழ்நாட்டில் அரசு அலுவலகங்களில் ஆகட்டும். தொழிலகங்களில் ஆகட்டும், தமிழ்வழி படித்தவர்களுக்கு மட்டும்தான் வேலை வாய்ப்பு என்றால் —

தமிழர்கள் அனைவரும் தமிழில் தானே படிப்போம்.

இங்கு — தமிழ் நாட்டில் தமிழனுக்கு வேலை இல்லை.

நெய்வேலி — நிலக்கரிச் சுரங்கங்களில் ஆகட்டும்,

நரிமணம் — கன்னெய்க் (பெட்ரோல்) கிணறுகளில் ஆகட்டும்,

எண்ணூர் — அனல்மின் நிலையத்தில் ஆகட்டும்.

— எந்த இடத்திலும் அலுவலக வேலைகளில் தமிழன் இல்லை.

எல்லாம் வடநாட்டினரும், பிற இனத்தவருமே தான் உள்ளனர்.

நெய்வேலி நிலமும் தமிழனுக்கு இல்லை,

நெய்வேலியில் கிடைக்கிற நிலக்கரியும் தமிழனுக்கு இல்லை.

நெய்வேலிச் சுரங்கத்தில் வேலை செய்கிற வேலை வாய்ப்பும் தமிழனுக்கு இல்லை.

நெய்வேலியில் கிடைக்கிற மின்சாரமும் தமிழனுக்கு இல்லை.

உத்திரப்பைதிர(பிரதேச)த்தில் இந்தி தவிர வேறு மொழியில் படிக்க முடியாது.

நடுவண்(மத்தியப்)பைதிரத்தில் இந்தி தவிர வேறு மொழியில் அலுவல் இல்லை.

ஆனால், தமிழ்நாட்டில் — தமிழ் தெரிந்திருக்க வேண்டும் எனக் கட்டாயம் இல்லை.

இப்படி எந்த இனத்திலாவது ஏமாளி இருப்பானா?

கேரளாவில், நிலம் வைத்திருந்த தமிழனெல்லாம் நிலம் பிடுங்கப்பட்டு விரட்டி அடிக்கப் படுகின்றான்.

கோலாரில், பெங்களூரில் தமிழன் நிலமே வாங்க முடியாமல் அடித்து நொறுக்கப்படுகிறான்.

ஆனால், தமிழ்நாட்டில் — தமிழன் தான் வைத்திருக்கிற கொஞ்சநஞ்ச நிலத்தையும், வடநாட்டான்களிடமும், பிற இன மக்களிடமும் விற்று விட்டு இரப்பு (பிச்சை) எடுக்கின்றான்.

ஆக — இந்த நிலை நீண்டுகொண்டே போவதா? இதற்கு எல்லைதான் எது?

தமிழ் நாட்டு மாணவர்களே, இளைஞர்களே சிந்திக்க வேண்டாமா?

நாம், உத்திரப்பைதிரத்தில் நமக்கு வேலை, கொடு எனப் போராடவில்லை?

பீகாரில் தமிழனுக்குக் கட்டாயம் வேலை கொடுத்தே ஆக வேண்டும் எனக் கேட்க நாம் இனவெறியர்கள் அல்லர்.

நாம் — நம் நிலத்தில், நம் நாட்டில், தமிழ்நாட்டில், நம் மொழியில் — தமிழ் மொழியில் படித்தவர்க்கு மட்டும் வேலை வாய்ப்பு வேண்டும் எனப் போராடுகிறோம்.

தொடர்வண்டி — தமிழ்நாட்டில் ஓடுகிறது. தமிழன் காசு கொடுத்து அதில் பயணம் செய்கிறான்,

ஆனால், தமிழ்நாட்டில் தொடர்வண்டித் துறையில் பணி செய்ய மட்டும் இந்தி தெரிய வேண்டுமாம்! ஆங்கிலம் தெரிய வேண்டுமாம்!

எதற்கு என்கிறோம்? தமிழ்நாட்டில் தமிழர்க்கு முழுமையாக வேலை கொடுத்தாலே போதும். இங்கு வேலை இல்லாத் திண்டாட்டம் நீங்கும்.

எனவேதான் தமிழர்களே — தமிழ்நாட்டில் தமிழ்மொழிவழி படித்தவர்களுக்கு மட்டும் வேலை வாய்ப்பு கட்டாயமாக்க வேண்டும் — என்பதை வலியுறுத்தி,

Scanned with CamScanner

# இலக்கியத்தை வளர்ப்பவை மரபுப் பாடல்களே!

## திருக்குறள் மணி, புலவர் இறைக்குருவனார்

முன்னாள் 'உலகத் தமிழ்க் கழகப்' பொதுச் செயலாளரும், இற்றைத் தமிழ் நெறிக் குடும்ப அமைப்பின் தோற்றுநரும், சென்னை, முரசொலி செய்தியிதழின் துணையாசிரியரும் ஆகிய, திருக்குறள் மணி, புலவர் இறைக்குருவனார் கடந்த 16-2-90 வெள்ளி இரவு 1-15 க்கு சென்னையினின்று புறப்பட்ட மலேசியன் வானூர்தி (MAS) வழியாகச் சென்று, கடந்த 12-4-90 வியாழன் இரவு 2-30 க்கு அதே வானூர்தி வழி சென்னை வந்தடைந்தார்.

அவர் மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் பல இலக்கிய நிகழ்ச்சிகளிலும் பிற பொது நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டுள்ளார். (அவர் நிகழ்ச்சி விளக்கங்கள் பற்றிப் பின்னர் வரும்.)

அவர் மலேசியாவில் இருந்த பொழுது, அவருடைய நேருரை ஒன்று, மலேசிய **தமிழ் நேசன்** (28-2-90) நாளிதழில் வெளி வந்தது. அதில், தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் பற்றிச் சில தெளிவான கருத்துகளைக் கூறியிருக்கிறார். அந்நேருரையில் வெளிப்படுத்திய கருத்துகளை அன்பர் நலம் கருதி இங்கு வெளியிடுகிறோம்.

"*உரை வீச்சு* என்பது பாடலாக (கவிதையாக) முடியாது. அது வெறும் உரை நடைதான்: இலக்கண வரம்புக்குட்பட்டு எழுத இயலாதவர்களின் புதிய கண்டு பிடிப்பு அது. அதை உரை வீச்சு என்றே அவர்கள் வைத்துக் கொள்ளட்டும். நமக்கு எவ்வகைக் கருத்து வேறுபாடும் கிடையாது. ஆனால் மரபுப் பாடல்களைப் புனைகின்றவர்களுக்கு ஈடாகத் தங்கள் பெயரும் புகழும் நிலைக்க வேண்டுமென்பதற்காகத் தங்களின் உரை நடைத் துணுக்கிற்குப் 'புதுக்கவிதை' என்றும் அதனை எழுதுவோர் 'கவிஞர்' என்றும் கூறிக் கொள்வதுதான் வருந்தத்தக்க ஒன்றாக இருக்கிறது,

உரைவீச்சை நேரிடையாகச் சொல்லாமல் உருவகத்தினால் சொல்ல வேண்டுமென்று இவர்கள் நினைக்கிறார்கள். மேலும் நடைமுறையில் அஃதாவது சொற்களை எழுதியும், சொற்களை உடைத்தும், வளைத்தும், மடக்கியும் போட்டு எழுதுவதே புதுக் கவிதை என்றும் இவர்கள் எண்ணுகிறார்கள்.

ஆங்கிலத்திலே 'New Poem' என்பதைத் தழுவியே எழுதப் பெறுகின்றன புதுக் கவிதைகள் என்றும் இந்த உரைவீச்சாளர்கள் கூறுகின்றனர். இ்து அவர்களின் தாழ்வு மனப்பான்மையையே காட்டுகிறது. திருக்குறள் வெண்பாவால் ஆனது. எனினும் அதிலும் கூட எத்தனையோ பாட்டுகள் உரைவீச்சு போன்றே அமைந்துள்ளன. அதற்காக அவற்றை உரை வீச்சு என்று கூற முடியுமா? உரைவீச்சு எனஒருவகையே பாட்டு இலக்கணத்தில் கிடையாது.

உரைவீச்சு முழுமையான உணவாகாது. கொறிக்கும் தீனியாகத்தான் இருக்க முடியும், மரபுப் பாடல்கள் உயிர் வாழத் தேவையான உணவைப் போன்றவை. செய்யுள் வடிவம் மட்டுமே என்றும் நிலைத்து வாழக் கூடியவை.

இலக்கிய வளர்ச்சி என்பது இப்போது எல்லா இடங்களிலும் குறைந்தே காணப்படுகிறது. இலக்கிய வளர்ச்சிப் பணிகளில் இறங்கி வேலை செய்வோரின் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது. இலக்கியம் என்னும் பெயரிலே என்னென்னவோ எழுதுகிறார்கள். இலக்கியம் வேண்டும் என்றால் அது மரபுப் பாடல்களாகத் தான் இருக்க வேண்டும். அப்போதுதான் இலக்கியம் நிலை பெற்று வளரும். அரசியல் தொடர்பாகக் கேட்கப் பெற்ற சில கேள்விகளுக்கு அவர் விடையளிக்கும் பொழுது அவர் கீழ்வரும் கருத்துகளை வெளிப்படுத்தினர்.

பேராயக் கட்சி (காங்கிரசு) என்பதும் தேசியம் என்பதும் தமிழுக்கு மாறானது என்பதை இக்காலத் தமிழ் மக்கள் உணர்ந்து விட்டார்கள்... திராவிட இயக்கங்கள் தோன்றியிராவிட்டால் தமிழன்தான் தமிழன் என்பதையும் தன் தாய்மொழி தமிழ் என்பதையும் என்றோ மறந்திருப்பான்,"

—காசிதாசன்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

'*தமிழ் நாடு இளைஞர் பேரவை*'
'*தமிழ்நாடு மாணவர் பேரவை*'
—மாநாடு நடத்த இருக்கிறது.

இதைத் தமிழகம் முழுக்கக் கருத்துப் பரப்ப இருக்கிறது. அதற்காகத் தொடர்ந்து போராட இருக்கிறது. எனவே. தமிழர்களே, தமிழக இளைஞர்களே, மாணவர்களே—

நம் தேவைக்காக, உரிமைக்காக மாநாட்டில் ஒன்றிணைந்து முழங்குவோம். போராடுவோம்! வாருங்கள்!

- O **அனைத்துத் துறைகளிலும் தமிழ்வழிக் கல்விக்குப் போராடுவோம்!**
- O **தமிழ் வழியே படித்தவர்க்கு மட்டும் தமிழ் நாட்டில் வேலை வாய்ப்புக்கேட்டுப் போராடுவோம்.**
- O **தமிழக மக்கள் மீதான அனைத்து அடக்கு முறைகளையும் எதிர்த்துப் போராடுவோம்.**

—தமிழ்நாடு இளைஞர் பேரவை
—தமிழ்நாடு மாணவர் பேரவை

# இதுதான் தமிழ்நாடு! இவன் தான் தமிழன்!

(பெருஞ்சித்திரனர் பேசியிருக்கிறரா?) பெருஞ்சித்திரனரைப் பொறுத்தவரை, அவர் தமிழை வைத்து வியாபாரம் செய்யும் ஒரு ஆள். இது என் அபிப்பிராயம் மட்டுமல்ல; தி.மு.க.வில் பெருஞ்சித்திரனரைப் பற்றிய அபிப்பிராயமும் இதுதான். தமிழ் எத்தனையோ பேரை வாழ வைக்கிறது. அதில் பெருஞ்சித்திரனர் வயிற்றுப் பிழைப்புக்காகத் தமிழை வைத்து வாழபவர். இப்படியே போடுங்கள். ஏனென்றல்- நெருக்கடி காலத்தில், அவர் கைது செய்யப்பட்டபோது, அவருடைய தமிழ்ப் பற்று தெரிந்தது! மன்னிப்புக் கடிதத்தை தூய தமிழில் எழுதிக் கொடுத்தார்! இந்திரா காந்திக்கு மன்னிப்புக் கடிதம் எழுதி, அவரை துதிபாடி, அதனல் விடுதலை செய்யப் பட்டு, தன் வயிற்றுப் பிழைப்புக்கும், வாழ்க்கைக்கும் தமிழைப் பயன்படுத்திய ஒரு சுயநலவாதி. இந்த ஆட்களால் தமிழர்களுக்கு எந்த லாபமும் இல்லை."

பெ. சீனிவாசன் ச.ம உ.
தி. மு. க. சிவகாசித் தொகுதி.
1-6-90 'துக்ளக்' இதழில் நேருரை.

**ஆசிரியர் விளக்கம்:**

திரு. பெ. சீனிவாசன் அவர்களை இக் கருத்துகளைத் தெரிவிக்கின்ற அளவுக்குத் தகுதியுள்ளவராக நாம் கருதவில்லை. ஏனெனில் அவருக்குத் தமிழ் என்றலே என்னவென்று தெரிவதற்கு வாய்ப்பில்லை. அரசியலிலும் அழமுடையவரல்லர் அவர். அவரின் அரசியலறிவு என்பது தமிழகத்தில் சாய்கால் உள்ள ஒரு கட்சியைச் சார்ந்து இயங்குவதே. இப்படிப்பட்ட அரைகுறையான பெயர் வழிகளைப் பார்த்தே 'துக்ளக்' பார்ப்பன இதழ் கருத்துகளைக் கேட்டு எழுதுவதே அதற்கு ஊதியமாக அமையும். பொதுவாக நம் தமிழர்கள் இவ்வாறன தன்மையுடையவர்களாகவே இருக்கின்றனர். எதற்கு, யாரிடம், என்ன சொல்வது என்னும் அடிப்படை விழிப்புணர்வு கூட திரு. சீனிவாசன் போன்றவர்களுக்கு இருப்பதில்லை. பிழை அல்லது குறைபாடு அவருடையதன்று. அவர் போன்றவர்களை வழி நடத்திச் செல்லும் தலைவர்க்கு இப்படிப் போன்ற 'தத்துப்பித்து'கள் தாம் வேண்டும். இது நிற்க.

திரு. சீனிவாசன் இங்கு இரண்டு கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார். ஒன்று, நம் தூய தமிழ்த் தொண்டை அவர் மேற்கொண்டிருக்கும் 'வயிற்றுப் பிழைப்பு' என்று இழிவு படுத்தியது. இரண்டு, கடந்த நெருக்கடி நிலையில் நாம் 'மிசா'ச் சட்டத்தின் கீழ் ஓராண்டு சிறையிருந்த பொழுது 'மன்னிப்புக் கேட்டுக் கொண்டு எழுதி வெளியே வந்ததாக' இழிவு படுத்தியிருப்பது.

இவற்றுள் அவர் முதலாவதாகக் கூறிய நம் தொண்டு பற்றிய இழிவுரைக்கு அவர் தலைவராக ஏற்றுக் கொண்டுள்ள கலைஞரும், அவர் அவைத் தலைவராக அமர்த்தியுள்ள திரு. தமிழ்க் குடிமகனுமே விடை கூறும் முதல் தகுதி படைத்தவர்களாக நாம் கருதுகின்றேம். அடுத்து, கடந்த 30, 35 ஆண்டுகளாக நாம் எந்தத் தமிழுக்கும், தமிழர்க்கும் தொண்டாற்றி வருகிறேமோ அந்தத் தமிழர்களே விடை கூறத் தக்கவர்கள். அவர்கள் இரு தரப்பினர்க்கும் மேல் நாம் ஏதாவது விடை சொல்ல வேண்டுமானல், நாம் திரு. சீனிவாசனுக்கும் அவர் கருத்தை வெளிச்சப் படுத்தும் 'துக்ளக்' குக்கும், தமிழப் பொது மக்களுக்கும் கூறும் பணிவான விடை இதுதான்: அஃதாவது நாம அரசியலில் புகுந்து அழிம்புகள் செய்தும், கையூட்டு வாங்கியும், மக்களைச் சுரண்டியும் பிழைக்காமல், தமிழ் என்னும் வயலை உழுது, தனித் தமிழ்ப் பயிர் விளைத்து வேளாண்மை செய்து, தமிழால் பிழைப்பதையும், தமிழுக்காகப் பிழைப்பதையுமே 'பெருமை' என்று கருதுகிறேம்.

இனி, நம் மேல் சுமத்திய இரண்டாவது இழிவுக்கான விடையிது.

ஆம், நெருக்கடிக் காலத்தில் நாம் சிறையிருந்த நேரத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியின் தமிழக ஆளுமைப் பொறுப்புச் செயலாளர்க்கு நம் நிலையைக் கீழ்வரும் கருத்துப் பட ஒரு மடல் எழுதியிருந்தோம். ஆனல் அது நம்மை விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டு இந்திராவுக்கு எழுதிய மன்னிப்புக் கடிதமோ அவரைத் 'துதி' பாடியெழுதிய புகழ் மடலோ அன்று.

அக்கால் என்னுடன் சிறையிருந்தவர்கள், அவர்கள் சிறையிருந்த ஓராண்டுக் காலத்தில், அவரவர்களின் கட்சிகளின் சார்பில், அவரவர்களின் குடும்பப் பராமரிப்புக்காக உதவிகள் பெற்றுக் கொண்ட பொழுதில், நாம் எந்தக் கட்சியிடமிருந்தும் எந்தவுதவியும் பெருமல் வெளியே நம் குடும்பம் அரைப் பட்டினியும், கால் பட்டினியுமாக இருந்ததையும், நாம் நடத்தி வந்த அச்சகத்தையும் இதழ்களையும் நடத்தவியலாமல் இடர்ப் பட்டதையும் எண்ணி நாம் அரசுக்குத் தெரிவித்த விளக்க மடலே அது.

அம்மடலில் நாம் எழுதிய சரியான வாசகங்கள் நம் நினைவில் இல்லை. ஆனல் நாம் தெரிவித்த கருத்துகள் இன்னும் இன்றும் நம் தன்மானவுணர்வில் கலந்து இருப்பவை. அம்மடலில், நாம் எந்த அரசியல் கட்சியையும் சார்ந்தவரில்லை என்றும், (அக்கால் உ.த.மு.க, தொடங்கப் பெறவில்லை.) தமிழ் நலமும் இன நலமும் கருதிய இலக்கிய இதழ்களின் ஆசிரியன் என்றும், எதன் பொருட்டு

Scanned with CamScanner

# ஆரியப் பார்ப்பனரும் சமசுக்கிருதமும்!

அறிவூட்டாமல் பகுத்தறிவு விளங்காது; பகுத்தறிவு ஊட்டாமல் மெய்யறிவு விளங்காது!

பார்ப்பனியம் இந்திய மக்களினத்தின் கொடு நோய்! மக்களை ஏமாற்றவே ஆரியப் பார்ப்பனர் இந்து மதத்தை உருவாக்கினர்; கடைப்பிடித்து வருகின்றனர்.

மெய்யறிவில்லாதவர்கள் மதத்தின் போலித்தனங்களையும், பொய், புனை சுருட்டுகளையும் மக்கள் உண்மை உணருமாறு எடுத்துக் கூறி விளங்கச் செய்து விட முடியாது.

இந்து மத மூடச் செயல்களும், தில்லு முல்லுகளும் பார்ப்பன ஏமாற்றும் சூழ்ச்சியும் மக்களுக்கு விளங்கக் கூடாது என்பதற்காகவே, மதப் பயன்படுத்தத்திற்கென்று சமசுக்கிருத மொழியைப் பார்ப்பனர் அக்காலத்தில் அவர்களுக்குத் தெரிந்திருந்த வேத மொழி, அவர்கள் வந்து புகுந்த வடநிலத்தில் பரவியிருந்த பிராகிருதம், பாலி முதலிய வடதிரவிட மொழிகள், தமிழ் ஆகிய தென்மொழி ஆகியவற்றைக் கொண்டு, உருவாக்கிக் கொண்டனர். சமசுக்கிருதம் ஒரு குழூஉக் குறியே! பார்ப்பனர்கள் மட்டுமே விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகப் படைத்து மொழியப் பெற்ற மொழியே அது.

இந்த நிலையில் தமிழர்கள் அறிவுணர்வு பெறுமல் எந்த நிலையிலும் திருந்த முடியாது. என்வே உண்மைத் தமிழ் வழியாகப் பார்ப்பனியத்திற்கு எதிராக உள்ள அனைத்துக் கருத்துகளும் பரப்பப் பெற வேண்டும். அப்பொழுதுதான் போலிச் சமசுக்கிருதப் புன்மைகள் விளங்கும்.

வெறும் தமிழ் படித்த தமிழ்ப் புலவர்களால் இந்தப் பணியைச் செய்ய முடியாது. தமிழ்ப் படிக்காத அறிஞர்கள் பிறராலும் இதைச் செவ்வனே செய்வது கடினம். அறிவியலும் தமிழும் படித்த மெய்யுணர்வாளர்களால் மட்டுமே தாம் நம் மக்களுக்கு உண்மை அறிவை ஊட்ட முடியும். O

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

நம்மை அரசு 'மிசா'ச்சிறையில் வைத்திருக்கின்றது என்பது கூடத் தெரியாத நிலையில், நாம் நடத்தி வந்த இதழ்களும் அச்சகமும் மிகவும் நலிவடைந்து வருவாய் இல்லாமல் உள்ளதென்றும், அதனால் நம் குடும்பம் வறுமையிலும், குழந்தைகள் தொடர்ந்து கல்வி பெற இயலாமல் துன்புறுகின்றனர் என்றும், இந் நிலையில் நம்மை விடுதலை செய்தாவது, விடுமுறை தந்தாவது வெளியில் விட்டால், தாம் அவற்றை சீர் செய்வதற்கு உதவியாக இருக்கும் என்றும் அரசுக்கு எழுதிக் கேட்டிருந்தோம்.

இதில் எவ்வகையான மன்னிப்புக் கோரலுக்கும் இடமில்லை. இந்திராவைத் 'துதி'பாடும் தேவையும் இல்லை. அவ்வாறு மன்னிப்பு வேண்டியும், இந்திரா 'துதி' பாடியும் நாம் அரசுக்கு எழுதியிருந்தால், பெ. சீனிவாசனின் கட்சி நண்பர்கள் சிலர் அவ்வாறு செய்து, பொது விடுதலை வரும் முன்னரே வெளியே வந்ததுபோல், நாமும் ஊதியத்துடன் வெளியே வந்திருப்போம். ஆனால், மற்ற எல்லாரையும் போலவே முழுமையாக ஓராண்டுக் காலம் நாம் சிறையில் வைக்கப் பெற்றிருந்தே இயல்பான முறையில் விடுவிக்கப் பெற்று வெளியில் வந்தோம் என்பதை, நம்மை கொள்கை வகையில் இழிவு படுத்திப் பேசித் திரிகின்ற சீனிவாசனும் பிற அன்பர்களும் உணர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்

மற்றபடி, நம்மைச் 'சுயநலவாதி' என்றும், 'இந்த ஆட்களால் தமிழர்களுக்கு எந்த 'லாபமும்' இல்லையென்றும், சுயநலமும், இலாபம் கருதும் நோக்கமுமே வாழ்க்கையாகக் கொண்ட திரு பெ. சீனிவாசன் போன்றவர்களுக்காக, அவர்களும் தமிழர்களாகப் பிறந்து விட்ட உருவங்களாக உலா வருகின்ற நிலைக்காகப் பெரிதும் வருந்துகின்றோம்; இரக்கப் படவும் செய்கின்றோம்.

பெருஞ்சித்திரனார்.

---

## அரசியலில் தூய்மையான தலைவர் யார்? — பொது மக்கள் கருத்து!

1988 திசம்பர் முதல் 1989 வரை நாட்டில் நம்பிக்கையான நல்ல தலைவர்கள் யார் என்று 'சங்கட்' என்னும் கன்னட நாளிதழ் இந்திய அளவில் ஓர் ஆய்வைப் பொது மக்களிடம் மேற்கொண்டிருந்தது. அ'து இப்பொழுது ஒரு முடிவையும் வெளியிட்டுள்ளது.

அந்த முடிவுப்படி தலைவர்களுக்குக் கிடைத்த நன்மதிப்பு விழுக்காடுகள் வருமாறு. வி. பி. சிங். பற்றி நல்ல கருத்தைத் தெரிவித்தவர்கள் 70.4 விழுக்காட்டினர். இராசீவ் அடுத்த நிலையைப் பெற்றுள்ளார் 51.6 விழுக்காடு.

இந்திரா பேராயத்தின் முன்னாள் அமைச்சர்களான பி. வி. நரசிம்மராவ், எசு. பி. சவாண், என். டி. திவாரி, கே.சி. பந்த் ஆகியோர் குறைந்த விழுக்காட்டு ஆதரவையே பெற்றுள்ளனர்.

இன்றைய எதிர்க்கட்சிகளின் தலைவர்களில் மற்றவர்களான எக்டே, எல். கே. அத்வானி, வாச்பேயி, சோதிபாசு ஆகியோர் நன்மதிப்பைப் பெற்றுள்ளனர். பிற தலைவர்களான சந்திரசேகர், தேவிலால் மீது மக்கள் அவ்வளவு நிறைவாக இல்லை என்று அந்நாளிதழ ஆய்வு தெரிவிக்கிறது.

Scanned with CamScanner

# தின மல (ரின்) தீ நாற்றம்!

'தமிழ்நாட்டில் - கருணாநிதி ஆட்சியில் பிரிவினை (வாதங்கள்)த் தருக்கங்கள் பரவி வருகின்றன எனவே கருணாநிதி ஆட்சியைக் கலைக்க வேண்டும்' என்று பார்ப்பனத் தலைமைகளும், பாரதீய சனதாக் கட்சியும் நடுவணரசுக்கு மிரட்டியும், தெரிவித்தும் வருவதாகத் தெரிகிறது.

இவர்களின் நோக்கம் எவ்வாறேனும் கருணாநிதி ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்பது யாவரும் அறிந்த வெளிப்படை. அதற்குப் 'பிரிவினை' என்பது சாக்குப் பொருள்.

இஃது ஒருபுறம் இருக்க 'தினமலர்' ஏடும் 'துக்ளக்'கும் தங்களுடைய முகாமையான பணியாகப் பிரிவினைப் பற்றிய செய்திகள் எங்கெங்கு வந்தாலும் அதைத் திரித்தும், கொச்சைப்படுத்தியுமான செய்திகளை அப்பட்டமாக வெளியிட்டு வருகின்றன.

இந்தியா என்பது இவர்களுக்கு மட்டும் அப்பன் வீட்டுச் சொத்துப் போலவும், உரிமை கேட்பவர்கள் எங்கோ வெளிநாட்டிலிருந்து வந்து நேர்மையற்ற முறையில் கேட்கும் நாடோடிகள் போலவும் இவர்களின் பேச்சும் நடவடிக்கையும் இருக்கின்றன.

ஆனால் தஞ்சை மாநாடு தடை செய்யப் பட்டவுடன் இவர்களின் நேரடி அரசியல் எதிரியான முதல்வர் கருணாநிதி போற்றுதலுக் குள்ளாகிறார். பாரதீய சனதா கருணாநிதிக்கு நன்றி தெரிவித்துப் பாராட்டுகின்றது.

இந்தியாவில் ஒரே இனம் பல்வேறு இனங்களை ஒடுக்கி ஆண்டு கொண்டிருக்கையில் எவ்வாறேனும் எப்படியேனும் உரிமைக்குரல் வெடிக்கத்தான் செய்யும் என்னும் இயற்கையின் போக்கு இவர்களுக்கு ஏன் தெரிந்திருக்க வில்லை?

ஒரு தஞ்சை மாநாட்டைத் தடை செய்வதன் வழியோ செய்திகளைத் திரித்துக் கூறுவதன் வழியோ உரிமையுணர்ச்சியை அடக்கி விடவோ தடுத்துவிடவோ முடியாது. இன்னும் அவ்வுணர்ச்சி மக்களிடம் பரவத்தான் செய்யும். மக்கள் தொடர்ந்து ஏமார்ந்து கொண்டிருப்பதற்கு ஏமாளிகள் அல்லர்.

அந்தந்த மாநிலங்களிலும் சொல்லி வைத்தாற்போல் ஒரே போன்ற தேசிய இன உரிமையுணர்ச்சி எழுவதற்கு என்னதான் காரணம்? பரவலாக சிறுபான்மை இனம் ஒன்று தன் அதிகாரத்தாலும், சுரண்டல் வகுப்பு ஒன்று பொருளியலாலும் அடக்கியாண்டு கொண்டுள்ளது என்றுதானே பொருள்.

ஏதோ மக்கள் தங்கள் பக்கம் இருப்பது போலவும் அவர்கள், **'நாட்டைத் துண்டாடும் பிரிவினைவாதிகள்ஒழிக!' 'மாநாட்டுக்குத் தடை விதித்த தமிழக அரசு வாழ்க!'** என்று எதிர் முழக்கங்கள் போட்ட போலவும் தினமலரின் நச்சுவாய் திரித்துப் பேசுகிறது. இந்தச் செய்தி முற்றிலும் தினமலரின் சொந்தமான - கற்பனையான - தான்தோன்றித் தனமான செய்தி என்பது இதைப் படிக்கும் அனைவருக்குமே தெரியும். இ'து ஒரு புரட்டுச் செய்தி.

**'ஏதோ தமிழ்மொழி. தமிழ்நாட்டு நலன் என்று பேசிக்கொண்டிருந்த நெடுமாறன் துப்பாக்கி ஏந்தி தீவிரவாதம் நடத்தி தனிநாடு போராட்டத்தில் குதிக்க அழைக்கிறாரே என்று பெரும்பாலான இளைஞர்கள் அதிருப்தி அடைந் தனர்'** என்று தினமலர் கற்பனை செய்து எழுதுகிறது. இதில் மொழி, நாட்டுநலன் என்பது 'ஏதோ' வாம். தினமலர்தான் இளைஞர்கள் உள்ளத்திற்குள் புகுந்து பார்த்து எழுதி விட்டதாம்.

அதிகார வகுப்பின் அடிவருடியான தினமலர் 'உரிமை' என்ற பேச்சு எங்கெங்கு வந்தாலும் அதைக் கொச்சைப்படுத்துவதையே கங்கணம் கட்டிக் கொண்டு செய்கிறது. இதை அன்பர்கள் நுட்பமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

பாரதீய சனதாவின் நன்றியைப் பெற்று மகிழ்ந்திருக்கும் முதல்வர் கருணாநிதி அவர்கள் தஞ்சை மாநாட்டைத் தடைசெய்து விட்டதால் தன் ஆட்சியை உறுதி செய்து விட முடியுமா? அவ்வாறு ஒருவேளை செய்ய முடிந்தாலும் நமக்கு ஒருவகையில் மகிழ்ச்சியே. ஆனால் பார்ப்பனத் தலைமைகளும், பொருளியல் சுரண்டல் முதலைகளும் கருணாநிதி ஆட்சியை நிலைக்க வைக்குமா?

கருணாநிதி தமிழினத் தலைவர் என்று சொல்லப்படுகிற நிலையிலிருந்து மாறி, பார்ப்பனத் தலைமைகளுக்கு நிலையான அடிமை நிலையில் இருந்துதான் இது போன்ற உரிமை மாநாடுகளைத் தடை செய்யவேண்டும். இதை கருணாநிதி விரும்புகிறாரா? எவ்வளவு காலத்திற்கு இந்த அடிமைத்தனம் நீடிக்கலாம் என்று அவர் விரும்புகிறார்?

எவ்வாறேனும் இந்நிலையில் கருணாநிதி அல்லது அவர் போன்றோர் ஓர் உரிமையான ஆட்சியைச்செய்து விட முடியாது. அவ்வாறு கருணாநிதியோ அல்லது அவர் போன்ற இன்னொரு முதல்வரோ உரிமையுள்ள ஆட்சியை நடத்த வேண்டும் என்பதே இந்தத் தஞ்சை மாநாட்டின் நோக்கம்.

இந்த மாநாட்டைத் தடை செய்வதன் வழி கருணாநிதி தன்னை நிலையான அடிமையாக (பிரகடனப்படுத்தி)க் கொள்வாராயின் தினமலர்களும், பாரதீய சனதாவும் தங்கள் நன்றிகளையும் பாராட்டுதல்களையும் வழங்குவதில் வியப்பென்ன இருக்கிறது? —நிறையன்

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாடு தனியார் பள்ளி ஆசிரியர் சங்கம் தமிழ் வழிக் கல்வியையும், பொதுமை உணர்வை-யும் போற்றி வரும் இயக்கம். அதன் சீர் மிகுந்த செயல்களைப் பாராட்டுகின்றேன்:

தமிழ், தமிழர், தமிழர் முன்னேற்றம் காணக் கல்வித் துறையில் தாங்களும் தங்கள் இயக்கமும், இதழும் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்' தன் ஒத்துழைப்பை நல்கும்.

உதயை. மு. வீரையன் தமிழ்ப் படைப்புகளில் தமிழர் வாழ்வில் உள்ள முரண்பட்ட—சாதி, சமய நிலைமைகளை எதிர்த்துப் போராடும் தன்மை பொதிந்துள்ளது — பாராட்டுகின்றேன். நன்றி, வணக்கம்.

அன்புள்ள,
பறம்புக்குடி, பறம்பை அறிவன்.
1-5-1990

**இ; மா. சுடரொளி—தமிழர் கழகம்!**

பெறல்:

இளைஞர். மா. சுடரொளி என்ற சோதிப் பிரகாசம் அவர்கள், 'தமிழர் கழகம்'
மயிலார்ப்பூர் சென்னை-4.

அன்புக் கிளைஞர்க்கு,

வணக்கம், 'உலகத் தமிழின முன்னேற்றக் கழக'த்தின் துணைப் பொதுச்செயலர் பொறுப்-பேற்றுள்ளேன்—பாவலரேறு அமர்த்தம் அறிவீர்கள்!

'தமிழர் கழகம்', 'உலகத் தமிழின முன்-னேற்றக் கழக'த்தின் 'உயர்ந்த கொள்கை ஏழு'ம் செயல்பட உதவும் என நம்புகிறேன்.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் ஓர் உலகந்தழுவிய இயக்கமாகப் பரந்தியங்கத் தங்களின் கருத்துரைகளையும், உதவிகளையும் எதிர்பார்க்கிறேன். தொடர்புகளையும் தந்து அறிவுத் துணையும் அளிப்பீர்கள் என நம்புகிறேன்.

அன்புடன்,
பறம்புக்குடி, பறம்பை அறிவன்.
1-5-1990

**ஈ: பழ. நெடுமாறன்—தமிழர் தேசிய இயக்கம்**

பெறுநர்:

திருமிகு. பழ. நெடுமாறன் அவர்கள்,
தலைவர்,
**தமிழர் தேசிய இயக்கம்,**
மேல மாசி வீதி, மதுரை.

தோழமை சான்ற தலைவர்க்கு,

வணக்கம்.

என்னை, 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலராகப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் (உ. த. மு. கழக முதல்வர்) அவர்கள் அமர்த்தம் செய்துள்ளார்கள்.

எனவே, 'உலகத் தமிழின முன்னேற்றக் கழக'த்தின் உயர்ந்த கொள்கைகள் ஏழினையும் செயற்படுத்துவதில் தங்களின் அறிவுரையும், கருத்துரையும் கிடைக்குமென நம்புகிறேன்,

'உயிர் பெரிதன்று; தமிழர் உயர்வே பெரிது', 'பதவி பெரிதன்று; தமிழர் மானமே பெரிது' எனச் செயல்படும் தங்களின் 'தமிழர் தேசிய இயக்கம்' ஒரு கட்சி அன்று; ஓர் இயக்கம். இதன் 'தேசிய இன நல' முயற்சிகளை உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் வரவேற்கிறது.

'தமிழர், சாதி, மதம், கட்சி என்னும் கண்ணிகளில் சிக்கித் தவிக்கின்றனர். தாங்கள் அவர்தம் 'தவிப்புகளை' மாற்றத் தணியாது பாடு படுகின்றீர்கள்.

அவ்வகையில் 'உலகத் தமிழின முன்னேற்றக் கழக'மும் செயல்படத் தகுந்த எளிய என் முயற்சிகளுக்கு ஊக்கமளிக்க வேண்டுகிறேன்.

தங்கள்,
பறம்புக்குடி, பறம்பை அறிவன்.
1-5-1990

## 3, துணைப் பொதுச்செயலர்க்கு வந்த மடல்கள்.

*(1) ஆலங்குளம் அருளாளன்—நாள் 18-4-90*

தமிழ்நிலம் 100 உறுப்பினர் கட்டணம் சேர்க்கும் பணி நடைபெற்று வருகின்றது. எங்கள் பகுதியில் 100 தமிழ்நிலம் 100 பேரிடம் சென்றுசு வேண்டும் என்ற உணர்வுடன் உறுப்பினர் திரட்டி வருகிறேன்.

*(2) கண்டிதம்பட்டு, தஞ்சை தமிழ்க்கனல்: 18-4-90*

துணைப் பொதுச் செயலர் பொறுப்பு கிட்டி-யமை பெரும் பேறே.

*(3) ப. அறவாழி, மைவாடி, போழறப்பட்டி. 23-4-90*

...தாங்கள் உ. த. மு. க. துணைப் பொதுச் செயலராக அமர்த்தம் செய்யப் பெற்ற செய்தியும், தங்கள் அறிக்கையும் 'தமிழ் நில'த்தில் படித்தேன், மகிழ்ச்சியும் பாராட்டுகளும்,

சூன் திங்கள் முதல், தங்கள் அறிவிக்கையின் படி செயல்படுவேன்...தங்கள் செயலாண்மையில் கழகம், புதிய அரத்தம் பாய்ந்த தென்புடன் பொலிவும் எழுச்சியும் பெறுவது உறுதியே!...

*(4) திருப்பெருந்திரு மதுரை சிவனியத் திருமடப் பெருங்குரு (குருமகா சன்னிதானம்) தலைமை அலுவலகம்—மதுரை—625 001— 23-4-90*

மெய்யன்புடையீர்,

தங்கள் 14-04-90 ஆம் நாளிட்ட மடல் கிடைத்து, நமது திருப் பெருந்திரு 'குருமகா சன்னிதானம்' அவர்கள் திருக்கண் பார்வையிட்டு மகிழ்ச்சி கொண்டார்கள்.

Scanned with CamScanner

[illegible] நமது திருப்பெருந்திரு. 'குரு மகா சன்னிதானம்' அவர்களின் 'அருளாசி' என்றும் துணை நிற்கும்!

இலங்கைத் தமிழர்களின் துயர்களும், துன்பங்களும் 'உதய சூரியனை'க் கண்ட பனி போல விலகி, நமது 'நிரந்தரப்' பாராட்டுதலுக்குரிய 'டாக்டர்' கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் அவர்களின் வாழ்வு ஏற்றம் கண்டிடும் என நம்புவோமாக!

ஆங்கிலம் உலகப் பொது மொழியாக உள்ளது. இஃது அனைத்து நாடுகளாலும், மக்களாலும் ஒப்புக் கொள்ளப் பெற்று வழக்கத்தில் உள்ளது. எனவே, ஆங்கிலம் மூலம் உலகத் தொடர்பு கொள்வதில் தவறு இல்லை.

ஸ்ரீலஸ்ரீ என்பது வடசொல். இது பல காலமாக நடைமுறையில் இருந்து வருகிறது. இதனை ஆங்கிலத்தில் எழுதும்போது Sri-La-Sri என்று எழுதுகிறோம். இதையே தமிழில் எழுதும் போது, "திருப் பெருந்திரு" என்று எழுதுகிறோம். எனவே, இதில் முரண்பாடு எதுவும் இல்லை.

தமிழ் மொழி வளர்ச்சியில் கால வட்டத்தில் வட சொல்லும், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிச்சொற்களும் கலக்கலாயின. இதனைத் தமிழறிஞர்கள் வரவேற்றிருக்கிறார்கள். "தமிழால் முடியும்" என்று இருந்தாலும் எல்லாத் துறைகளிலும், எல்லாவற்றிலும் தூய தமிழையே பயன்படுத்துவது என்பது முடியாதது மட்டுமல்ல வரவேற்கக் கூடியதுமாகும்.

எனவே, உலக அரங்கில் தமிழினம் தலை நிமிர்ந்து செல்லவும், முன்னேற்றம் காணவும், எல்லாம் வல்ல இறைவன் துணை கொண்டு செயலாற்றுவோம்! வெற்றி நமதே!!

திருப் பெருந்திரு 'குருமகாசன்னிதானம்'
அவர்கள் அருளாணைப்படி
'ஆதீன' மேலாளர்.

னார். உடனே தொண்டர்களும் பொது மக்களும் அவர் தலைமையில் கூடி ஊர்வலமாகச் செல்லத் தொடங்கினர். ஒரு பரபரப்பானசூழ்நிலை அங்கு நிலவியது.

திகைத்து நின்ற காவல்துறையினர் திடுமென திரு. நெடுமாறன் உட்பட ஊர்வலத்தினரைச் சுற்றி வளைத்துத் தளைப்படுத்தினர். நான்கு தமிழ் மறத்தியர் உட்பட ஏறக்குறைய 500 தமிழர்கள் தளைப்படுத்தப்பட்டனர்.

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை-எம்மை
மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை

என்ற புரட்சிப் பாவேந்தனின் வழி நடக்கும் அந்தத் தமிழர்கள் காவல்துறை தங்களைத் தளைப்படுத்தியபொழுது **'தமிழ்நாடு தமிழருக்கே'** என்றும் **"தமிழக விடுதலையை வென்றெடுப்போம்"** என்றும் அரசின் அடக்கு முறையைக் கண்டித்து விண்ணதிர முழக்கமிட்டனர். அங்கு தளைப்படுத்தப்படாமல் சுற்றி நின்றிருந்த பொதுமக்களும் இந்த முழக்கங்களை முழங்கிய காட்சி நம்மை மெய்சிலிர்க்க வைத்தது. —நம் சிறப்புச் செய்தியாளர்

## எதிர்ப்புக் கூட்டம்

தஞ்சையில் தமிழ்த் தேசியத் தன்னுரிமை மாநாட்டைத் தடைசெய்து தமிழ்த் தலைவர்களையும் தோழர்களையும் சிறைப்படுத்தியதையொட்டி பல்வேறு இயக்கங்கள் சென்னையிலும் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலும் எதிர்ப்புச் சுவரொட்டிகள் ஒட்டியுள்ளன.

இவற்றில் பல இயக்கங்கள், **தமிழுணர்வுள்ள இலக்கிய, அரசியல் அமைப்புகளின் கூட்டமைப்பு** என்ற பெயரில் 26.6.90 **செவ்வாய் மாலை சென்னையில்** தமிழக அரசின் அடக்குமுறைப் போக்கையும், அடிப்படை உரிமை பறிப்பு பற்றியும் கண்டித்து **கண்டனக் கூட்டம்** ஒன்று நடத்தத் திட்டமிட்டுள்ளன.

**உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!**

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

**சிந்தனைக்கு . 55**

**இனத்தை அடகு வைத்து, அடிமையாக அரசாள்வதைவிட, இனநலனுக்காக அரசு துறப்பது மேல்.**

(மாதம் இருமுறை வெளிவரும்)இதழ் எண் 138

அனுப்புதல்:

**தமிழ்நிலம்**

**5. அருணாசலத் தெரு**
**திருவல்லிக்கேணி, சென்னை-5**
தொலைபேசி எண் : 847829.

உறுப்பினர் :

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு. 1-00 |
| ஆண்டுக்கட்டணம் | உரு. 50-00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு. 25-00 |

**தமிழர் ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்க வேண்டிய இதழ்கள்! தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு.**

ஆசிரியரும், வெளியிடுபவரும்:
**பாவலரேறு பெருஞ்சித்திரனார்,**
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம்,
5, அருணாசலத் தெரு, சென்னை-5.



Scanned with CamScanner